**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்**

**முன்னிலை : திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்**

**2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் நாள்**

**<u>அசல் வழக்கு எண்.140/2016</u>**

1. ரமா
2. பரமேஸ்வரி ---- வாதிகள்

/இடையே/

ஈஸ்வரி ----பிரதிவாதி

இவ்வழக்கு கடந்த 10.01.2020 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு வாதிகள் தரப்பில் திரு.டி.மனோகர், வழக்கறிஞர் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் திரு.வி.மணிகண்டன், வழக்கறிஞர் ஆஜராகியும், பதிலுரை தாக்கல் செய்யாததால் பிரதிவாதி தோன்றாதரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை ஆய்வில் இருந்து வந்த மேற்படி வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**<u>தீர்ப்புரை</u>**

பிரதிவாதியோ அவரது ஆட்களோ வாதிகள் வழக்கு சொத்தினை அமைதியாக அனுபவித்து வருவதில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகள் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள்.

**<u>1) வாதி வழக்குரையின் சுருக்கம் :-</u>**

வழக்கு சொத்து கிராம நத்தம் நிலமாகும். வாதிகள் மகள் மற்றும் தாயார் ஆவார். வழக்கு சொத்துக்களானது 1ம் வாதியின் தாத்தா அழகப்பன் ஆக்கிரமித்து அனுபவித்து வந்தார். அவருடைய இறப்பிற்கு பின்னிட்டு வாதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தார் அனைவரும் சுமார் 45 வருடங்களாக அனுபவித்து வருகிறார்கள். வழக்கு சொத்தை சேர்ந்தாற்போல் வாதிகளின் பட்டா நிலமானது சர்வே எண்.815/18ல் அமைந்துள்ளது. வாதிகள் 2 1/2 சென்ட் நிலத்தில் அனுபவத்தில் உள்ளனர். அதில் 2ம் வாதி வீடு கட்டி அவருடைய குடும்பத்தாருடன் வசித்து வருகிறார். 2ம் வாதி மேட்டூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 04.10.2013ல் பத்திரபதிவு எண்.1546/2013ல் 774 சதுரடி நிலம் 1ம்

வாதிக்கு செட்டில்மெண்ட் மூலம் கொடுத்துள்ளார். பட்டா நிலமான ச.எண்.851/18 மற்றும் வழக்கு சொத்தான சர்வே எண்.815/17 ல் உள்ள கிராம நத்த நிலத்தையும் வாதிகள் சுமார் 45 வருடங்களாக அனுபவித்து வருகிறார்கள். பிரதிவாதி வாதிகள் வீட்டிற்கு பின்புறம் ச.எண்.851/22 ல் வசித்து வருகிறார். வழக்கு மாதிரி வரைபடத்தில் உள்ளவாறு பிரதிவாதி வீடு அமைந்துள்ளது. பிரதிவாதி வீட்டிற்கு செல்ல மாதிரி வரைபடத்தில் உள்ளவாறு பல வழிகள் உள்ளது. ஆனாலும் வாதிகள் அனுபவித்து வரும் வழக்கு சொத்தில் நுழைய பிரதிவாதி ஆட்கள் மற்றும் அரசியல்வாதிகளுடன் வந்து இடைஞ்சல் செய்துள்ளார். பிரதிவாதியின் கணவர் வழக்கு சொத்தை பொது தடவழியாக அறிவிக்க வேண்டும் என கேட்டு வழக்கு சொத்தில் இடைஞ்சல்கள் செய்கிறார். இறுதியாக பிரதிவாதி 30.07.2016 ல் ஆட்களுடன் வந்து அத்துமீறி வழக்கு சொத்தில் நுழைந்து வாதிகளின் சுவாதீனத்தை இடைஞ்சல் செய்ய முயற்சித்தனர். பக்கத்தில் உள்ளவர்களின் உதவியால் பிரதிவாதியின் செயல் தடுக்கப்பட்டது. எனவே பிரதிவாதியோ அவரது ஆட்களோ வாதிகள் வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகள் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள்.

## <u>2) பிரச்சினை</u>

இவ்வழக்கு அனுமதிக்கத்தக்கதா என்பதே பிரச்சினையாகும்.

## <u>3) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) வாதிகள் தரப்பில், 2 ம் வாதி பரமேஷ்வரி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, 29.12.2013 தேதியிட்ட 2 ம் வாதியின் பெயரிலான நத்தம் நிலவரி பட்டாவின் உண்மை நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 09.11.2013 தேதியிட்ட 2 ம் வாதி பெயரிலான அடங்கலின் உண்மை நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 09.11.2013 தேதியிட்ட வழக்கு சொத்திற்கான அடங்கல் கிராம நத்தம் சர்வே எண்.851/17 (பழைய எண்.137/2) வா.சா.ஆ.3 ஆகவும், 30.12.2013 தேதியிட்ட 1 ம் வாதியின் பெயரிலான வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ.4 ஆகவும், 26.01.2015 தேதியிட்ட ம் வாதியின் பெயரிலான வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ.5 ஆகவும், 28.03.2016 ம் வாதியின் பெயரிலான வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ.6 ஆகவும், 27.07.2016 ம் வாதியின் பெயரிலான வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ.7 ஆகவும், 01.08.2016 தேதியிட்ட மாதிரி வரைபடம் வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. வாதிகள் தரப்பில் ராஜகோபால் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டார்.

(ii) 2ம் வாதியான வா.சா.1 வழக்குரையை உறுதிப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1-ன் சாட்சியத்தை அனுசரித்து வா.சா.2 சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.ஆ.3 லிருந்து வழக்கு சொத்தானது அரசு புறம்போக்கு காலியிடம் என்பதும், வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆகியவற்றிலிருந்து வழக்கு சொத்திற்கு அருகே உள்ள ச.எண்.851/18 2ம் வாதியின் அனுபவத்தில் உள்ளதும் தெரிய வருகிறது. 1ம் வாதி பெயருக்கு 2ம் வாதி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என சாட்சியம் அளித்துள்ள போதும் அதற்கான சான்றாவணத்தை முன்னிலைப்படுத்தவில்லை. இருந்த போதும் வாதிகள் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் உள்ளது என்பது வா.சா.1, 2-ன் சாட்சியத்திலிருந்து தெரிய வருகிறது. பிரதிவாதி தோன்றாதரப்பினராக உள்ளதால் வா.சா.1,2ன் சாட்சியங்களை நிராகரிக்க எவ்வித முகாந்திரமும் காணப்படவில்லை. எனவே வாதிகளின் சுவாதீனத்தை இடையூறு செய்ய பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதால் வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என இவ்வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதித்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, பிரதிவாதியோ அவரது ஆட்களோ வாதிகள் வழக்கு சொத்தினை அமைதியாக அனுபவித்து வருவதில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்யக் கூடாது என நிரந்தரமாக தடையுறுத்தி வாதிகள் கோரிய நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

**ஒம்/-எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டுர்.**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:-</u>**

வா.சா.1 பரமேஸ்வரி

வா.சா.2 ராஜகோபால்

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| **வரிசை எண்** | **தேதி** | **ஆவணங்கள்** | **தன்மை** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 29.12.2013 | 2 ம் வாதி பரமேஸ்வரி பெயரில் உள்ள நத்தம் நிலவரி பட்டா | உண்மை நகல் |
| வா.சா.ஆ.2 | 09.11.2013 | 2 ம் வாதி பெயரில் உள்ள அடங்கல் | உண்மை நகல் |
| வா.சா.ஆ.3 | 09.11.2013 | தாவா சொத்திற்கான அடங்கல் கிராம நத்தம் சர்வே எண்.851/17 (பழைய எண்.137/2) | உண்மை நகல் |
| வா.சா.ஆ.4 | 30.12.2013 | 1 ம் வாதியின் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீது | அசல் |
| வா.சா.ஆ.5 | 26.01.2015 | 1 ம் வாதியின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது | அசல் |
| வா.சா.ஆ.6 | 28.03.2016 | 1 ம் வாதியின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது | அசல் |
| வா.சா.ஆ.7 | 27.07.2016 | 1 ம் வாதியின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது | அசல் |
| வா.சா.ஆ.8 | 01.08.2016 | தாவா சொத்திற்கான மாதிரி வரைபடம் | அசல் |

**ஒம்/-எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**